StudentBounty.com

Register Number | | | | | | |

**Part III**

# வணிகவியல் / COMMERCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 200

## பகுதி - அ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.

ii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. 40 × 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து உமது விடைத்தாளில் எழுதுக :

1. ஒரு பன்னாட்டு நிறுமம் ..................... என அழைக்கப்படுகிறது.

அ) உலக அளவில் பெரியது ஆ) கூட்டாண்மை

இ) கூட்டுறவு சங்கங்கள் ஈ) பொதுத்துறை நிறுவனங்கள்.

2. பின்வரும் சிறப்பியல்புகளில் எது தனி வணிகருக்கு ஏற்றதல்ல

அ) தனிநபர் உரிமை

ஆ) தனிமனித கட்டுப்பாடு

இ) எல்லா இலாபமும் வணிகருக்கே

ஈ) நெகிழ்ச்சித் தன்மையற்றது.

3. கூட்டாண்மை பதிவு செய்யப்படுவது

அ) கட்டாயம் ஆ) விருப்பத்தின் பேரில்

இ) நீதிமன்ற உத்தரவின் பேரில் ஈ) பதிவாளர் உத்தரவின் பேரில்

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



4. கீழ்க்கண்டவற்றுள் எது நாடாளுமன்ற அல்லது மாநிலச் சட்டமன்றங்கள் இயற்றிய தனிச் சட்டத்தின் மூலம் உருவாக்கப்படுகிறது ?

அ) பட்டய ( சாசன ) நிறுமம் ஆ) அயல்நாட்டு நிறுமம்

இ) அரசு நிறுமம் ஈ) சட்டமுறை நிறுமம்.

5. முன்னுரிமைப் பங்கு முன்னுரிமை பெற்றிருப்பது

அ) பங்காதாயம் பெறுவதில் மட்டும்

ஆ) நிறுமம் கலைப்பிற்குள்ளாகி முதலைத் திருப்பித் தரும்பொழுது மட்டும்

இ) வாக்குரிமையைச் செலுத்துவதில்

ஈ) பங்காதாயம் பெறுவதிலும், நிறுமம் கலைப்பின் போது பங்கு முதலைத் திரும்பப் பெறுவதிலும்.

6. தகவலறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கும் குறைந்தஅளவு பங்கெடுப்பைக் கீழ்க்கண்ட நாட்களுக்குள் ஒரு பொது நிறுமம் பெற வேண்டும்

அ) 90 நாட்கள் ஆ) 120 நாட்கள்

இ) 130 நாட்கள் ஈ) 60 நாட்கள்.

7. தகுதி பெற்ற நிறுமச் செயலரை நியமித்தல் கீழ்க்கண்டவற்றில் எந்நிறுமத்திற்குக் கட்டாயமாக்கப்பட்டுள்ளது ? செலுத்தப்பெற்ற பங்கு முதல்

அ) ரூ. 5,00,000 க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

ஆ) ரூ. 50,00,000 க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

இ) ரூ. 25,00,000 க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்

ஈ) ரூ. 15,00,000 க்குக் கூடுதலாக இருக்கும் நிறுமம்.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

8. ஒரு இயக்குநர் செயலாற்றுவது

அ) நிறுமத்தின் முகவராக ( Agent )

ஆ) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் அல்லது நம்புறுதியாண்மையராக ( Trustee )

இ) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக

ஈ) மேற்சொன்ன அனைத்துமாகச் செயலாற்றுகிறார்.

9. இந்தியாவில் புதிய பங்குகள் விற்பனை செய்யும் மிகவும் பிரபலமான முறை

அ) பொது வெளியீடு ஆ) விற்பனைக்கான முனைவு

இ) மேலாண் இடைத் தரகர்கள் ஈ) மேலெழுதுதல்.

10. பங்கு மாற்றகம் இதில் ஈடுபட்டிருக்கிறது

அ) சரக்கு ஆ) சேவைகள்

இ) நிதி பத்திரங்கள் ஈ) நாட்டின் பணம்.

11. பத்திரங்கள் ஒப்பந்த ( ஒழுங்குபடுத்துதல் ) சட்டம் இவ்வாண்டு நிறைவேற்றப்பட்டது

அ) 1952 ஆ) 1956

இ) 1964 ஈ) 1966.

12. கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களின் குறைந்த அளவு

அ) 2 ஆ) 7

இ) 10 ஈ) 25.

13. ஒரு கூட்டுறவுச் சிறப்பங்காடி அளிப்பது

அ) கடன் ஆ) சேவை

இ) சரக்குகள் ஈ) ரொக்கம்.

14. "எல்லாம் அவரே, அவரே எல்லாம்" இக்கோட்பாட்டின்படி இயங்கும் அமைப்பு

அ) தனியாள் வணிகம் ஆ) கூட்டுறவு சங்கம்

இ) இந்து கூட்டுக் குடும்பம் ஈ) கூட்டாண்மை.

[ Turn over

StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



15. ................. முகமைக் கோட்பாட்டின் விரிவாக்கம் என்று வர்ணிக்கப்படுகிறது.

அ) கூட்டாண்மை ஆ) தனியாள் வணிகம்

இ) கூட்டுப்பங்கு நிறுமம் ஈ) கூட்டுறவுச் சங்கம்.

16. முதலீடு செய்து தொழிலை நிர்வகிக்கும் பொறுப்பேற்றுள்ள கூட்டாளி

அ) உறங்கும் கூட்டாளி

ஆ) பெயரளவு கூட்டாளி

இ) மேலாண்மை கூட்டாளி

ஈ) இலாபத்தில் மட்டும் பங்கேற்கும் கூட்டாளி.

17. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் ( Debenture - holders ) என்பார், அதன்

அ) கடனாளர்கள் ஆ) உறுப்பினர்கள்

இ) கடன் வாடிக்கையாளர்கள் ஈ) நிறுமத்தில் கடன் வாங்கியவர்கள்.

18. அரசுத்தொழில்கள் மிகச் செம்மையாக இயங்குவதற்கு மிகவும் உகந்தது எனப் பொதுவாகக் கருதப்படும் வடிவமைப்பு

அ) துறைவாரி அமைப்பாகும் ஆ) பொதுக் கழகமாகும்

இ) அரசு நிறுமமாகும் ஈ) கூட்டுப் பங்கு நிறுமமாகும்.

19. அரசு நிறுமம் இவற்றின் கீழ்ப் பதிவு செய்யப்படுகிறது

அ) மைய அல்லது மாநில அரசின் தனிச்சட்டம்

ஆ) இந்திய நிறுமச் சட்டம் 1956

இ) அரசாணை

ஈ) அரசியல் அமைப்பு சாசனம்.

20. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு

அ) பூரண நல்ல நம்பிக்கை

ஆ) முதலீட்டிற்கான தொகை இருத்தல்

இ) கூடி தொழில் செய்ய விருப்பம்

ஈ) கூட்டாளிகளின் மேலாண்மைக் திறன்

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



II. கோடிட்ட இடங்களை நிரப்புக :

21. ........................ விழுக்காடு மட்டுமே கூட்டுறவுச் சங்கத்தில் பங்கு ஆதாயம் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

22. கூட்டுறவுச் சங்கத்தில் எல்லா உறுப்பினர்களும் ........................ .

23. பங்குநர் ஒருவர்க்குப் பதிலாகக் கூட்டத்தில் கலந்து கொள்ள நியமிக்கப்படும் நபர் ........................ என அழைக்கப் பெறுகிறார்.

24. தகுதிப் பங்குகளின் மொத்த இயல் மதிப்பு ........................ ரூபாயை மிகக்கூடாது.

25. ஒரே சமயத்தில் ........................ பொது நிறுமங்களுக்கு மேல் ஒரு நபர் மேலாண்மை இயக்குநராக பணியாற்ற முடியாது.

26. சட்டமுறை அறிக்கையை நிறும உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் கூட்டம் நடைபெறும் நாளுக்கு ........................ நாட்களுக்கு முன்னராவது அனுப்பி வைக்கவேண்டும்.

27. நிலுவையிலுள்ள பங்காதாயம் பெற உரிமையுள்ள முன்னுரிமைப் பங்குகள் ........................ என அழைக்கப்படுகின்றன.

28. ........................ புதிய பங்குகளை வெளியிட இடைத்தரகர்களாக செயல்படுகின்றன.

29. ........................ ஆணை, ஒரு வாடிக்கையாளரின் இடைத்தரகருக்கு குறிப்பிட்ட பத்திரத்தை எந்த விலைக்கும் வாங்க அல்லது விற்க முழுச் சுதந்திரம் அளிக்கிறது.

30. இரண்டாம் நிலைச் சந்தையின் வாணிப அளவு ........................ யைப் பொறுத்து இருக்கும்.

31. குறிப்பிட்ட காலக்கெடுவுக்குப் பின் நிறுமம் மீட்டுக்கொள்ளும் கடனீட்டுப் பத்திரம் ........................ .

32. உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தை அமைப்பது ........................ .

33. நிறுமத்தில் ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளை ........................ல் மீண்டும் வெளியிடலாம்.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com



34. ஒரு தனியாள் வணிக உரிமையாளரின் ...................... திறமைக்கு எல்லை உண்டு.

35. எந்தப் பெயரில் கூட்டாண்மைத் தொழில் நடத்தப்படுகிறதோ அதுவே ...................... ஆகும்.

36. ...................... வணிகத்தை ஒழுங்குபடுத்த தனியாக சட்டம் ஏதுமில்லை.

37. ...................... கலைப்பு என்பது அனைத்து கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவு முறிந்துவிடுதலாகும்.

38. அவசர காலங்களில் கூட்டாண்மை நிறுவனத்தின் நன்மைக்காக கூட்டாளி ஒருவர் பயன்படுத்தும் உரிமைக்கு ...................... என்று பெயர்.

39. ...................... ஒரு சிலரிடம் பொருளாதார வலிமை செறிவதைத் தடை செய்கிறது.

40. ...................... துறையில் நுகர்வோரும், பணியாளர்களும் சுரண்டப்படுவது பரவலாகக் காணப்படும்.

## பகுதி - ஆ

*குறிப்பு :* i) ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்க.

ii) ஒவ்வொரு வினாவிற்கும் 4 வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $10 \times 4 = 40$

41. வாரிய அமைப்பின் பொருள் பற்றி கூறுக.

42. பன்னாட்டு நிறுமத்தின் எடுத்துக்காட்டுகளைத் தருக.

43. வரையறாப் பொறுப்பு என்றால் என்ன ?

44. பெயரளவு கூட்டாளி என்பவர் யார் ?

45. கூட்டாளிகளிடையே நிலவும் உறவுமுறை யாது ?

46. பங்கு முனைமம் என்றால் என்ன ?

47. ஆக நிறுமம் என்றால் என்ன ?

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

48. சட்ட முறை அறிக்கை என்றால் என்ன ?

49. சிறப்புத் தீர்மானம் என்றால் எதை குறிக்கும் ?

50. பங்கு மாற்றகத்தின் வரைவிலக்கணம் தருக.

51. போல்ட் ( BOLT ) என்பது யாது ?

52. கூட்டுறவு அமைப்பு - வரையறு.

53. "ஒரு நபர் ஒரு வாக்கு" என்பதன் பொருள் யாது ?

54. 'தகவலறிக்கைக்கு மாற்றறிக்கை' என்றால் என்ன ?

55. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன ?

## பகுதி - இ

*குறிப்பு :* i) ஏதேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

ii) ஒவ்வொன்றிற்கும் ஒரு பக்க அளவிற்கு மிகாது விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $5 \times 8 = 40$

56. இந்து கூட்டுக் குடும்ப வணிக முறையைப் பற்றி சிறுகுறிப்பு வரைக.

57. கூட்டாண்மை ஒப்பாவணத்தின் உள்ளடக்கம் யாவை ?

58. தனி வரையறு நிறுமத்தின் சலுகைகள் யாவை ?

59. ஒப்புறுதி நிறுமம் குறித்து குறிப்பு வரைக.

60. ஒரு பொது வரையறை நிறுமத்தில் இயக்குநர்கள் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர் ?

61. ஊக வணிகர்களின் வகைகளை விவரி.

62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து, அதன் சிறப்பியல்புகளைத் தருக.

63. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் உள்ள வேறுபாடுகளை வரைக.

[ Turn over

www.StudentBounty.com
Homework Help & Pastpapers

## பகுதி - ஈ

குறிப்பு : i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

ii) ஒவ்வொன்றிற்கும் இரண்டு பக்க அளவிற்கு மிகாது விடையளி.

iii) அனைத்து வினாக்களும் சம மதிப்பெண்கள் உடையன. $4 \times 20 = 80$

64. பல்வேறு வகையான தொழில் வடிவமைப்புகளைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

*அல்லது*

பங்குகட்கும் கடனீட்டுப்பத்திரங்கட்கும் உள்ள வேறுபாடுகளை விவரி.

65. தனிநபர் வணிகத்தின் குணாதிசயங்கள் யாவை ?

*அல்லது*

ஒரு நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாவை ?

66. கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

*அல்லது*

அரசுத் தொழில்களின் நோக்கங்களை விவரி.

67. பங்கு மாற்றகத்தின் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் யாவை ?

*அல்லது*

கூட்டுப்பங்கு நிறுமத்திற்கும், கூட்டுறவுச் சங்கத்திற்கும் உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக.

www.StudentBounty.com
Homework Help & Pastpapers
StudentBounty.com